**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 7948/E/2017**

திரு நூ.முகம்மது பாரூக் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கடலாடி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம். . ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 16.06.2017 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 20.07.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 13.10.2017 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு நூ.முகம்மது பாரூக் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு வீ.சடையாண்டி, தலைமையிடத்துத் துணை

வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கடலாடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் 16.06.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தங்களது பூர்வீகச் சொத்துக்கள் கடலாடி தாலுகா, பெரியகுளம் குரூப் என 6 சர்வே எண்களைக் குறிப்பிட்டு, அவற்றிற்குண்டான 1982-ஆம் வருடம் முதல் 1995-ஆம் வருடம்வரை உள்ள பட்டா, சிட்டா, 10-1 அடங்கல் ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றதா, மேற்படி சொத்திற்கு உட்பிரிவோ அல்லது பட்டா, சிட்டா மற்றும் 10-1 அடங்கலில் மாற்றம் செய்திருந்தால் அந்த மாற்றம் மற்றும் உட்பிரிவு செய்துள்ள தஸ்தாவேஜு கோப்பு நகல், மேற்படி சொத்துக்கள் தற்போது யார் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது, அவற்றின் நகல் என 3 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், கடலாடி தாலுகா என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை உடனடியாக வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 20.07.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையிட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், கடலாடி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க ஆணையிடுமாறும், தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு இழப்பீடு வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 13.10.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார்.

4. ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் மேல்முறையீட்டாளர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் ரிட் மனு (W.P.(MD) No.10108 of 2019) தாக்கல் செய்துள்ளதன் அடிப்படையில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை, 25.04.2019 தேதியிட்ட ஆணையில் "When the matter is taken up for hearing, the learned Government Advocate appearing for the respondents, on instructions, submitted that the petition mentioned second appeal shall be disposed of within a period of three months from the date of receipt of a copy

of this order" என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவல் முழுமையாக 12.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. விசாரணையின்போது மேல்முறையீட்டாளரும் தான் கோரிய தகவலை முழுமையாகப் பெற்றுக் கொண்டதாக ஆணையத்தின் முன்பு தெரிவித்தார். மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதென்பதை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 7948/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கடலாடி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு நூ.முகம்மது பாரூக்,
த/பெ. நூர் முகம்மது,
T. மாரியூர் - 623 703.
கடலாடி தாலுக்கா,
இராமநாதபுரம் மாவட்டம்.

Copy to: Judgement File.
24/09/19